1979 மார்ச் 22]

## தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்.

*வினா எண். 505— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தற்சமயம் செயல் படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் நிர்வாகத்தை தற்சமயம் யார் மேற் கொண்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) & (ஆ) : ஒன்றியக் குழுக்கள் கலைக்கப்பட்ட பின்பு இந்த அமைப்பு இயங்கவில்லை. தேர்தல்களுக்குப் பின்னர் மீண்டும் இது உயிர்ப்பிக்கப் படலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் குழு கலைக்கப்பட்ட பிறகு தற்சமயம் அங்கு பணியாற்றும் அலுவலர்களுக்குச் சம்பளம் தரப்படாமல் இருப்பதாக அறிகிறேன். அதைக் கொடுப்பதற்கு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ? ஏற்கனவே அங்கே அம்பாசிடர் கார் வாங்கப் பட்டு, அது தற்பொழுது பயன்படுத்தப்படாமல் இருப்பதால் கெட்டு விடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. உடனடியாக அதை விற்று அவர்களுக்குச் சம்பளம் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தக் குழு கலைக்கப்பட்ட பிறகு அங்கு வேறு வேலை இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு மக்கள் குழு அமைக்கப்பட்டுள்ளதா ? அமைக்கப்பட்டுள்ள மக்கள் குழு எத்தனை முறை கூட்டப் பட்டிருக்கிறது என்று அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அது வேறு, இது வேறு.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் சிலவை மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டசபையிலே அறிவித்தார்கள். இப்பொழுது மத்திய அரசிலிருந்து அது ஒப்புக்கொள்ளப்பட்டதா, இல்லையா, என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

திரு. ஓ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வியில் ''தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்'' என்று இருக்கிறது. அது பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சங்கம் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு பாட்னாவில் நடைபெற்ற அகில இந்திய பஞ்சாயத்து சமிதிக்குச் சென்றபொழுது பல பிரச்னைகளை எழுப்பினோம். அதையெல்லாம் உங்கள் மாநிலத்தில் இருக்கின்ற சங்கம்தான் நிவர்த்தி செய்ய வேண்டும், அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொன்னார்கள். ஆகவே, உடனடியாக அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சங்கத்தை துவங்கி, பஞ்சாயத்துக்களுக்கு வேண்டிய காரியங்களை அதன் மூலம் நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே. பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அந்தத் தலைவர்கள் சங்கம் அமையும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, நான் அமைச்சரவர்களிடத்திலிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது, அந்தச் சங்கத்திற்காக வாங்கப்பட்ட கார் பயன்படுத்தப்படாமல் இருந்து வருகிறது. அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்குக் காலத்தில் சம்பளம் தரப்படவில்லை என்று அறிகிறேன். எனவே, அந்தக் காரை ஏலத்தில் போட்டு அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, சங்கம் நிரந்தரமாகக் கலைக்கப்பட்டு விட்டது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் முடிந்த பிறகு மீண்டும் அந்தச் சங்கம் அமையும்பொழுது கார் தேவைப்படும். இப்பொழுது சங்கம் இயங்கவில்லை. ஆகவே, ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கத் தேவையில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, அந்த யூனியனுக்குத் தலைவராக இருந்தவர் இராஜாராம் நாயுடு அவர்கள். இன்றைக்கு அந்தச் சங்கத்தைக் கலைத்து விட்டதால் அவரை எடுத்து விட வேண்டியதுதான். அதை நான் வரவேற்கிறேன். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் அந்த அலுவலகம் அப்படியே இருக்கிறது. அதைப் பழுது பார்ப்பதற்கு அமைச்சரவர்கள் ஆலோசிப்பார்களா? அதற்கு ஒரு ஆணையாவது போட்டு ஆவன செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

1979 மார்ச் 22]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, சங்கம் அமைந்த பிறகுதான் அலுவலகம் தேவை. இப்பொழுது பழுதாகியிருக்கிறது என்றால் பழுது பார்ப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யலாம்.

[முற்பகல் 9·10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.ஜே. இராமசாமி மனு போடுகிறார், இப்பொழுதே, 'என்னைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று. (சிரிப்பு).

திரு. பொ. காளியப்பன் : தலைவரவர்களே, இந்தச் சங்கத்திற்கு அப்பொழுது ஊராட்சிகளிலேயிருந்து ரூ. 100 பணம் கொடுத்தார்கள்—பெருந்தலைவர்கள் பணம் கொடுத்தார்கள். அதற்குக் கணக்கு இருக்கிறதா? அதிலிருந்து சம்பளம் கொடுத்தால் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அதிலிருந்து தான் சம்பளம் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஒன்றியக் குழுக்கள் கலைக்கப்பட்டன. சந்தா வரவில்லை, சம்பளங்கள் கொடுக்கப்படவில்லை.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜூன் மாதம் குறிப்பிட்ட தேதியிலே பஞ்சாயத்து யூனியன் தேர்தல் வரும் என்று சொன்னார்கள். டெல்லியிலிருந்து தலைவர் வந்த பிறகு கேட்டுக் கொண்டு அறிவிப்பதாகச் சொன்னார்கள். டெல்லியிலிருந்து தலைவர் வந்தாயிற்றே, கேட்டாயிற்றா? அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நாளைய தினம் மானியக் கோரிக்கையில் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசலாம்.

திரு. துரை கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலே பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இப்பொழுது இல்லாத காரணத்தால் தலைவர் பதவி இல்லையென்று சொன்னார்கள். இருக்கின்ற ஆலோசனைக் குழுக்களுக்கு ஆலோசனை வழங்குகிற தலைமை இடத்திலே ஒரு ஆலோசனைக் குழு போட்டு, மாநிலம் பூராவும் ஆலோசனை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படி உத்தேசம் இல்லை.

திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, அந்தச் சங்கத்திலே பணி புரிபவர்கள் நிரந்தரமாக்கப்பட்டவர்களா ? அல்லது தற்காலிகமாக வைக்கப்பட்டவர்களா ? நிரந்தரமாக வைக்கப்பட்டவர்கள் என்றால் தொடர்ந்து அவர்களுக்கு சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்த அமைப்பே ஒரு அலுவல் சார்பற்ற அமைப்பு.

## நாகைப்பட்டினத்தில் வீட்டு வசதித் திட்டம்.

* வினா எண். 506—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகைக்கு வீட்டு வசதித் திட்டத்தினை விரிவுபடுத்தக் கோரி நாகை வாசிகள் சங்கம் அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும்

(ஆ) இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நாகைப்பட்டினத்திலே அரசாங்கத்தினுடைய பல்வேறு இலாக்காக்கள் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆபீஸ்கள் இருக்கின்றன, மேலும் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கேயிருக்கிற ஸ்டாபுக்கும் ஆபீஸர்களுக்கும் வீடு இல்லாமல் ரொம்பக் குறைவாக இருக்கிறது. ஆகவே, நைபர்ஹுட் ஸ்கீம் போன்ற, ஏதாவது ஸ்கீம் ஏற்பாடு செய்ய அரசாங்கத்திடம் உத்தேசம் உண்டா ? ஸ்கீம் உண்டு என்றால், அதனுடைய டிடெய்ல்ஸ் என்ன ? எப்பொழுது ஆரம்பிப்பார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கும் வீடு உண்டு, நைபர்ஹுட் ஸ்கீமிலும் உண்டு. தமிழ் நாடு அரசு அலுவலர்களுக்கு 90 வீடுகள் ரூ. 23.60 இலட்சங்கள் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. 12 வீடுகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ளவை 3 மாதங்களில் முடியும்.